
“ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2004



மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் - விம்பிள்டன், இலண்டன்

லண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# GLOBAL ESTATE AGENTS LTD




**We specialise in Selling / Letting properties, and have proved our services by selling a few properties in Your area within 2-3 weeks**

**We urgently require two to four bed properties around your area for serious buyers registered with us.**

## Our charges are only 0.6% + VAT on No Sale No Fee Basis

## Why not call us NOW for IMMEDIATE RESULTS and a FREE VALUATION

Call us on

# 020 8682 5100

**233 Mitcham Road, Tooting SW17 9JG**

# GL Financial Services Ltd

*Total, Trusted, Mortgage Solutions...*

**Are you having problems in getting a Mortgage?**

* Can't get the right Mortgage? * No Bank statements?
* No Proof of Income * Difficult credit history?
**(CCJ's, Defaults, Mortgage Arrears,...)**
* Selfemployed no accounts * Need to raise funds for business?
* Trying to bring all your financial commitments under one payment?

**Whatever the problem, One call to**
## GL Financial Services
**will heal your financial headache**

**We specialise in arranging**

* Mortgage for 1st Time Buyers * Buy - to - Let Mortgages * Let - to - Buy Mortgages
* Remortagages * Right to buy Mortgages * Commercial Mortgages * Commercial Loans

## Life Assurance, Building & Contents Insurance

247 Mitcham Road, Tooting, SW17 9JQ

# tel : 020 8672 2333

*Your home is at risk if you do not keep up repayments on mortgages or other loans secured on it*

மணி 12

# கலசம்
# KALASAM

ஒலி 46

www.smsuk.org.uk
E-mail: kalasam@hotmail.com, kalasamsms@yahoo.co.uk

## தழைத்து வளரும் யோகக்கலை

விஞ்ஞான வளர்ச்சியும் இயந்திர வளர்ச்சிகளும் புதிய மனிதனுக்குப் பலவகையான சளகரியங்களையும் இன்பங்களையும் கொடுத்துள்ளன. ஆனாலும் இன்று மேற்கத்தைய நாடுகளில் வாழ்பவர்கள் அமைதி, ஆறுதல், இன்பம் அனுபவிக்காது பெரும் மன, உடல் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். மேற்கத்தைய சொகுசு வாழ்க்கை முறையினால் உடல் பருமன் நீரிழிவு நோய், இரத்தஅழுத்தம் போன்ற உடல் நோய்களும், பல மன நோய்களும் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றன.

அவசர வாழ்க்கை முறை மனிதனை இயந்திரமாக இயங்க வைக்கின்ற இக் கால கட்டத்தில் யோகக்கலையில் தற்போது அநேகமான மேலை நாடுகளில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இலண்டனில் (பிரித்தானியா) வெளியிடப்படும் வாழ்க்கை முறை பற்றிய பத்திரிகைகளில், குறிப்பாக மாதர் பத்திரிகைகளில் யோகக்கலை பற்றிய குறிப்புக்கள் தற்போது முக்கிய ஒரு அம்சமாக வெளியிடப்பட்டு வருகின்றன.

யோக வாழ்வு மிகப் பழமைவாய்ந்த இயற்கையான வாழ்க்கை முறை. இது இந்தியாவிலே 5000 ஆண்டுகளுக்கு முன் பதஞ்சலி முனிவரால் விளக்கப்பட்டிருக்கின்றது. யோகவாழ்வினால் எமது உடல், உள்ளம் வளப்படுத்தப்பட்டு ஆன்மிக வளர்ச்சியையும் அடைய வழிவகுக்கின்றது. இதுவே மனிதப் பிறவியின் நோக்கம்.

இன்று புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் எமது மக்களிடையே, இந்த நவீன வாழ்க்கை முறையினால் பலவிதமான உடல், உள்ள நோய்கள் அதிகரித்து வரும் இவ்வேளையில் எமது பாரம்பரிய யோக வாழ்வு இதற்குத் தேவையான நிவாரணங்களை வழங்குகின்றது.

இத் தருணத்தில் சைவ முன்னேற்றச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள யோக வாழ்வுமுறையைப் பரப்பும் நடவடிக்கைகள் அடைந்த துரித வளர்ச்சி இதன் தேவையையும் எமது மக்களுக்கு இக்கலையில் இருக்கும் ஆர்வத்தையும் பிரதிபலிப்பதாகும். யோகி ராம் சுந்தர் அவர்களின் வழிகாட்டலில் கடந்த ஒன்றரை வருடத்தில் 15 ஆக ஆரம்பித்த ஆர்வலரின் தொகை தற்போது 150 ஆக அதிகரித்து வளர்கின்றது. பல புதிய தொண்டர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர். நவீன முறையில் அமைந்த தனியான யோக மண்டபம் துரிதமாகக் கட்டி முடிக்கப்பட்டது. அறிவொளி வட்டம் (நுடெபைாவநஅெநவெ உசைஉடந) என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு யோக வாழ்வுக்கான வழிமுறைகள், கருத்தரங்குகள், நூலகம் போன்ற இன்னோரன்ன வழிகள் மூலம் மக்களுக்கு இவ்வாழ்வு முறை எடுத்துச் சொல்லப்படுகின்றது.

காலத்தின் தேவைக்கு ஏற்பச் செயல்படும் இது போன்ற சேவைகள் பல இடங்களிலும் வளரவேண்டும். இவை எமது பாரம்பரிய வாழ்க்கை முறைகளை எதிர்காலச் சந்ததியினர் பேண வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு.சிவ.அசோகன், திரு.சி. தம்பு, திரு.சு.வைத்தியநாதன், திரு.வ.இ.இராமநாதன், திரு. ந. நவநீதராசா, திரு.ந.சிவராசன், திரு.செ..தர்மலிங்கம், திரு.ம.ஜெயசீலன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road, Manor Park, London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# ஜெகதீஸ்வரம் இலண்டன் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஆலயத் தோற்றமும் சிறப்புகளும்

ஓம் காரம் பிந்து ஸம்யுக்தம்
நித்யம் நியாயேந்தி யோகினகா
காமதம் மோக்ஷதம் சைவ
ஓம்காரய நமோ நமஹ:

உலகமெல்லாம் கோடிக்கணக்கான ஜீவராசிகளைப் படைத்து அதற்கெல்லாம் உயிர்கொடுத்து ஒவ்வொரு கத்திலும் ஒவ்வொரு திருவிளையாடல் புரிந்து பல அற்புதங்களைக் காட்டி உலகில் முதல் நாயகனாக விளங்கும் குருமானின் ஆலயங்கள் பல உள்ளன. ஒவ்வொரு ஆலயங்களிலும் ஒவ்வொரு அற்புதங்கள் உள்ளன. இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள சிவன்ஆலயங்கள் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.

அதே போல் பிரித்தானிய ஐக்கிய ராஜ்யத்தில் விம்பிள்டன் பதியில் ஜெகதீஸ்வரம் என்னும் கம்பீரமான நாமத்தோடு அழகுற கல்யாண சொரூபராய் மீனாட்சி அம்பாளோடு சோமசுந்தரராய்க் காட்சியளித்து வருகின்றார் சிவபெருமான். இலங்கையில் கோணேஸ்வரம், கேதீஸ்வரம் போன்ற சிவாலயங்கள் நாயன்மாரால் பாடல் பெற்ற சிவத்தலங்களாக இருப்பது இந்து மக்கள் யாவரும் அறிந்ததே. அதேபோல் ஐரோப்பாவிலேயே முதன் முதலாக மூலமூர்த்தியே சில–ாவிக்கிரஹத்துடன் அமைந்த லிங்க மூர்த்தியாக இருப்பது ஜெகதீஸ்வரம் சிவன் ஆலயம் தான். இலண்டன் சொர்ணபூமி என அழைக்கப்படும். ஸப்த நதிகளின் ஒலி போல் தேமஸ்நதியின் தீர்த்தவாரிப் பிரியராய் மீனாட்சி அங்கயற்கண்ணி அம்மையோடு, விநாயகர், நவக்கிரஹம், நந்தி, பலிபீடம், வைரவருடன் இவ்வாலயம் அமைக்கப்பெற்று *28–11–2003* அன்று எம்பெருமானுக்கு நூதன மாஹாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. அன்று முதல் நான்கு காலப் பூஜையுடன் நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் ஒரு சிறப்பு யாதெனில் பங்குனி உத்தர நன்நாள் மீனாட்சி அம்மன் திருக்கல்யாண நாள். அதைப் பூர்த்திநாளாகக் கொண்டு முதல் பதினைந்து தினங்களும் கொடியேற்றத்துடன் சிவாகமுறைப்படி திருவிழாக்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தைக் கட்டிக்காத்து அறங்காவலராகப் பணிபுரிபவர் சிவநெறிச்செம்மல் மணிவண்ணன் அவர்கள். இந்த இளம் வயதில் எத்தனையோ வாலிபர்கள் களியாட்டமும், கேலிக்கூத்தும், மதத்தைப் பழித்தும் பேசிவரும் காலத்தில், குப்பைக்குள் தான் குண்டுமணி இருக்கும் என்பது போல, திருவாளர் மணிவண்ணன் அவர்கள் செய்யும் சேவை பாராட்டத்தக்கது. **நாடு நகரமும் நற்றிருக்கோயிலும் தேடித்திரிந்து சிவபிரான் என்று பாடுமின் பாடிப்பாடிப் பணிமின் பணிந்தபின் கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வானே** என்ற திருமூலர் கூற்றின்படி மணிவண்ணன் மனதில் எப்பவோ பதிந்த எண்ணம் இன்று திருக்கோயிலாகப் பரிணமித்துள்ளது.

சிவன் அற்புதமானவன். அவனைத் தினமும் வணங்கி அருள் பெற வாருங்கள். காலை *8.00* மணிக்குத் திருக்கதவு திறக்கப்படும். மதியம் *1.00* மணிக்கு நடைசாத்தப்பட்டு, மீண்டும் மாலை 5.00 மணிக்குத் திறந்து இரவு *9.30* மணிக்கு திருக்கதவு அடைக்கப்படும். வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் பகல் 3.00 மணிவரை கதவு திறந்திருக்கும். தினமும் காலை *9.00* மணிக்கும், மதியம் *12.00* மணிக்கும், மாலை *7.30* மணிக்கு இரவு பூசையும், *9.30* மணிக்கு அர்த்தசாமப் பூசையுமாக நான்கு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. பிரதோஷங்கள், ஆறு உத்தரங்கள், சிவனுடைய விஷேட தினங்கள் முதலியன உற்சவமாகவும், ஆடிப்பூரத்தைப் பூர்த்தியாகக் கொண்டு அம்பாள் கொடியேற்றத் திருவிழாவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. பக்தர்களின் வசதிக்கேற்ப அழகிய கல்யாண மண்டபமும் உள்ளது. மேலும் உங்கள் தேவைகட்கு ஆலயத்தில் தொடர்பு கொண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

சர்வேஜனா சுகினோ பவந்து
மேன்மை கொள் சைவ நீதி விளங்குகஉலகமெல்லாம்
சுபம்

ஆலய அறங்காவலர் சார்பில் சிவப்பிரம்மஸ்ரீ ராம்.
கெங்காதரக்குருக்கள் சாரதாபீடம்–துன்னையூர்

# அறிவே தெய்வம்

## முருகவே பரமநாதன்

**ஒருதரம் சரவணபவ என்று சொல்பவர் உளத்தினில் நினைப்பதெல்லாம் கைகூடுமென்று வேதங்கள் மொழியுதே உண்மையறிவான பொருளே**
**– சங்கரதாஸ்சுவாமிகள்**

ஆறறிவு உடையது மனிதம். ஆறாவதறிவைப் பகுத்தறிவு என்பர். பகுத்தறிவு வாதம் மிக்க இன்றைய உலகிற் பல சிந்தனாவாதிகள் தோன்றினர். உளவியல், மனிதஇயல், வாழ்வியல், சமூகவியல் போன்ற பல துறைகள் விரிவாக ஆய்வு செய்யப்படுகிறது. மனவியலிலே பல கிளைகள் வளர்ந்துள்ளன. ஒப்பியல் நெறியில் பலர் தம் முடிபுகளைச் சொல்லியும் உள்ளனர். அது மனிதம் உள்ளளவும் வளரும். மனம் புத்தி, சித்தம், அகங்காரம் என நம்மவர்கள் பகுத்துக்கூறினர். மனம் உடையவன் மனிதன். சிந்தனை வளம் நிறைந்தவன் மனிதன். எனவே அறிவு, பகுத்தறிவு, இயல்பறிவு, நுண்ணறிவு, மெய்யறிவு, பட்டறிவு, உற்றறிவு, கல்வியறிவு என்றெல்லாம் பேசப்படுகிறது. சமய ரீதியிலும், அறிவியல் வெகுதூரம் ஆராயப்பட்டுள்ளது.

கிழக்கிலும், மேற்கிலும் சமயம் பல உண்டு. ஒவ்வொரு சமயங்கள் பற்றியும் வெவ்வேறு மதிப்பீடுகள் கருத்துக்கள் பலரால் முன்வைக்கப்பட்டுள்ளன. கடவுட் கொள்கையுள்ள சமயங்களும், கடவுளை எற்காத சமயங்களும், தேவதூதர்களைப் பின்பற்றும் சமயங்களும் எனப் பல சமயங்கள் உலகில் உள்ளன.

கடவுளும், சமயமும் நம்பிக்கையில் எழுந்தனவே. ஆதாரபூர்வமான தத்துவ உண்மைகள், மத சம்பிரதாயங்கள் விஞ்ஞான ரீதியில் முடிவு செய்யப்பட வேண்டுமென்ற அபிப்பிராயமும் நிலவுகிறது. இந்த நம்பிக்கைகள் உண்மைக்கு ஒவ்வாதன. மூடநம்பிக்கையில் எழுந்தன என்றுகருதி சமயத்தில் ஈடுபாடில்லாதவரும் நம்பிக்கை இல்லாமலே வாழ்பவரும் உண்டு. **பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய் போலும்மே** என எழுதியும் வைத்துள்ளனர்.

சில நம்பிக்கைகள் எல்லாராலும் ஏற்றுக்கொள்ள முடியாமலும் இருக்கிறது. இச் சூழ்நிலையிலே பல தெய்வ வணக்கம், பல சடங்குகள், புதிய தெய்வ அறிமுகம், கண்மூடித்தனங்கள், வேண்டாத கிரியைகள் எனப் பல ஏற்றுக்கொள்ள முடியாத விஷயங்கள் நம் சமயத்திற் பெருகி மதச் செல்வாக்கை மக்களிடத்தில் இல்லாமற் செய்கிறது. மதியால் வந்தது மதம் என்பர் காஞ்சிப்பெரியவர். மக்களைச் சமைப்பது, பக்குவப்படுத்துவது சமயம் என்கிறார் குன்றக்குடியடிகளார். உண்மையிலே மத சம்பந்தமற்றதுவே கடவுள் சிறப்பு. ஒன்றுதான் தெய்வம். இரண்டு என்று வந்துவிட்டால் தெய்வமல்ல. அது கடவுள் படைப்பு எனலாம். பல கடவுள் உடையது சமயமும் இல்லை.

இன்று இந்து மதவாதிகள் ஸ்மார்த்தர்கள் சைவ சமயத்தை விழுங்க முயல்கின்றனர். நமது போர்மூட்டச் சீர்கேடுகளால் சைவ சமயிகள் நலிந்த போது, கைகொடுக்கும் போர்வையில் கிறீத்தவமதம் வெளியுலகிலும், நமது மண்ணிலும் வெகுவாக ஊடுருவிவிட்டது. இது கிறீத்தவ மதமாக்கும் அவர்கள் கொள்கையின் செயற்பாடு எனலாம். எவர்எப்படிச்சொன்னாலும் **தெய்வமொன்றென்றிரு** என்ற பட்டினத்தார் கோட்பாடும், **ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்** என்ற திருமூலர் தத்துவமும் எல்லாராலும் ஆமோதிக்கப்பட்டவையே. கொம்பியூட்டர் யுகத்திலே தெய்வம் பல பேசுவது அறியாமை, அறிவுமூடம் எனலாம்.

நாகரிகப் பழைமைவாய்ந்த நாடுகளில் ஒன்று எகிப்து. எகிப்திய நாகரிகம் தொன்மையானது மட்டுமன்றி ஆதிநாகரிகமுமாம்.

அம் மண்ணிலே பல்லாயிர வருடங்கட்கு முன்னே 2000 இற்கு மேற்பட்ட தெய்வ வழிபாடு இருந்ததாக அந்நாட்டு வரலாறுகள் கூறுகின்றன. இரண்டாயிரம் தெய்வங்களை வணங்கிவந்த பூர்விக எகிப்தியர்கள் இடையே கடவுள் ஒருவனே என்ற புதியசமயமப் புத்தொளி பரப்பியவன் ஃபாரோ அக்கன் அட்டான் என்ற அரசன். ஃபாரோ அ(க்)கன் அ(ட்)டான் கல்லாலோ செம்பாலோ எந்தச்சிலை செய்வதையும் தடைசெய்தான். இறைவனுக்கு வடிவம் இல்லை. ஆகாசமெங்கும் நிறைந்துள்ளான் எனவே பாடல்களையும் புதிதாக ஆக்குவித்தான். கி.மு 1400 ஆண்டுகளுக்கு முன் இப்படியொரு புரட்சி செய்த அவனை வரலாற்று ஆசிரியர்கள் போற்றினர். எகிப்திய—ஏன் உலக வரலாற்றிலே அவன் முக்கிய இடம்பெற்றான்.

இப்படிப் பார்க்கையில் ஏக தெய்வக் கொள்கையையே நம்முன்னோர் மேற்கொண்டனர் என்பது வெளிப்படை மட்டுமன்றி மாபெரும் உண்மையுமாம். இந்த நிலை மாறி ஆரியர் படையெடுப்பாற் பல தெய்வ வணக்கம் ஊடுருவியது. இந்த நிலை புலம்பெயர்ந்து வாழும் சில நாடுகளிலும் புகுத்தப்படக் காணலாம். சதுர்வர்ணம் பேசி ஆலயங்களையும், ஆண்டவனையும் பெருக்கும் ஆரியத்துக்கு அடிபணிந்து சௌசம் செய்யும் சூத்திரர்கள் இதை உணர்ந்ததாய் இல்லை. கல்வியாளர்களைக்கூட அவர்கள் வாங்கிவிட்டனர். இதனால் உண்மையான சமய நெறி சரிந்து வரக்காணலாம்.

திருவள்ளுவர் அடக்கமுடைமை, அருளுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை என்ற வரிசையிலே அறிவுடைமை, மெய்யுணர்தல் என்ற மகுடத்தில் இரு அதிகாரங்களில் இருபது குறள்கள் தந்துள்ளார். இஃது அறியாமை, மடைமை போன்ற மெத்தனங்களைக் களையவே எழுந்தன எனலாம். உடைமை என்றால் சொத்து, செல்வம், பொருள் முதுசொம், பொருந்தி இருத்தல் எனப் பலபொருள் படலாம். இந்த உடைமைகளில் மனித ஆளுமைகளில் மிக உயர்ந்ததும் வாழ்வியலைக் கொண்டிருக்க உதவுவதும் மனிதத்தை உயர்த்துவதும் இந்த அறிவுடைமைதான். அறியாமை என்னும் இருளகற்றும் ஞானபானு அறிவுடைமை. வள்ளுவர் சார்ந்த அறிவியக்கப் புலமைதரும் சிலபிரயோகங்கள் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

“அறிவற்றம் காக்கும் கருவி, நன்றின் பால் உய்ப்பது அறிவு, மெய்ப்பொருள் காண்பது அறிவு, செம்பொருள் காண்பதறிவு, நுண்பொருள் காண்பதறிவு, உலகத்தோடல்லதுறைவது அறிவு, அறிவுடையார்” ஆவதறிவார் அறிவுடையார் எல்லாம் உடையார். என்னும் தொடர்கள் எம்மைச் சிந்திக்கத்தூண்டுகின்றன. மெய்யுணர்தல் என்றால் உண்மையால் உணர்தல் என்று பொருள். இச் செந்நெறியிலே சென்ற சிந்தனாவாதிகள் அறிவே தெய்வமென அடித்துப்பேசினர். அது மட்டுமன்றி வெகுத்துப்போன தெய்வக்கொள்கையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்றைய இணையதளம் காணும் இளசுகள் என்ன, முதுசுகளும் கோயிலை வெறுக்கக் காரணம் ஏகப்பட்ட தெய்வங்களின் அறிமுகம். எதைக் கும்பிடுவது, எதைவிடுவது எதைத் தவிர்ப்பது என்ற வினா. ஒன்றைவிட்டு ஒன்றை வணங்கினால் கடவுள் கோபப்பிரசாதம் தருவாரோ என்ற பயம். சந்து பொந்தெல்லாம் தெய்வவடிவங்கள். ஒரு ஆலயத்திலே ஐந்து திருவிழாக்கள். அனேக சடங்குகள்.

எதற்கு முகம் கொடுப்பதென்ற சந்தேகம். இந்த நிலை நமது சமயத்திற்கு வரக்கூடா தன்ற நிலைப்பாட்டை உணர்ந்தே, அறிவே தெய்வம் என்ற உண்மையை ஒவ்வொரு உள்ளங்களிலும் உறைப்பாக்கி, ஒன்றுதான் கடவுள் என்ற உண்மையையும் நிலைநிறுத்தினர். **கல்லிலும் செம்பிலுமோ இருப்பன் எங்கள் கண்ணுதலே** எனப் பட்டினத்தார் பாடி வைத்தாரே ஏன்? நாம் சிந்திக்கத் தவறி விட்டோம். இனியாதல் சிந்திப்போம். நம் மத்தியிலே இந்த அறியாமையை அகற்றும் மூடத்தனத்தை ஒழிக்கும் மாமனிதர்கள் தோன்ற வேண்டும். எம் ஐயங்கள் போய் அறிவு பூர்வமான, கோட்பாடுகள் பரப்பப்பட வேண்டும்.

அறிவுலக மேதைகளின் அறிவோதயத்தில் நம் சமூகம் மெய்யுணர்வுபெறவேண்டும்.

கவிதை மரபிலும் சமுதாயமட்டத்திலும் சுதந்திர தாகத்திலும் பல திருப்பு முனைகளை ஆக்கிய மகாகவி புரட்சிக்கவி பாரதி நெஞ்சுபொறுக்காமற் பாடிய பாடல்கள் பலதெய்வ வணக்கத்தைப் பற்றியும் அறிவேதெய்வமென்ற உண்மையைப் பற்றியும் பேசுகின்றன.

**ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள்!— பல்**
**லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்**
**டாமெனல் கேளீ ரோ?**
**மாடனைக் காடனை வேடனைப் போற்றி**
**மயக்கும் மதியிலிகாள்!—எத**
**னூடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்**
**றோதி யறியீ ரோ?**

பாரதியார் கவிதைகள்— அறிவேதெய்வம் 1,2

**தெய்வம் பலபல சொல்லிப் —பகைத்**
**தீயை வளர்ப்பவர் மூடர்**
**உய்வ தனைத்திலும் ஒன்றாய்— எங்கும்**
**ஓர்பொரு ளானது தெய்வம்**
**யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்**
**யாவினும் நின்றிடும் தெய்வம்**
**பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டாம்**

பாரதியார் கவிதைகள்—முரசு11,13

இன்றைய இளந்தளிர்கள் விஞ்ஞானப் பார்வையில், மெய்ஞ்ஞானப்போக்கிற் பலதெய்வ வழிபாட்டை ஏற்பதாய் இல்லை. பல ஆலயங்களும், பற்பலதெய்வங்களும் வளர்ந்து, வர்த்தகக் கண்ணோட்டத்திலேதான் இயங்குகின்றன. தெய்வத்தை வளர்ப்பதிலும், ஆலயங்கள் சமுதாய நலன் பேணும் மையங்களாய்ச் சேவை செய்யவேண்டும். சமயம் பற்றிய தத்துவங்களை மக்கள் மத்தியில் விதைப்பதே தம் கடமையாகக் கொள்ள வேண்டிய காலம் இது. வெறும் கட்டிடங்களல்ல. சமயக்கட்டுமானமே புனித ஆலயங்கள். தர்மகர்த்தா சபைகள் அதர்மகர்த்தா சபைகளாக மாறுவதும், அறம்காவலர்கள் புறம்காவிகளாய் இயங்குவதும் வெறுப்பையே விளைவிக்கிறது. அவ்வண்ணமே பூசகர்களும் சிறந்தபூசகர்களாய் உழைக்கவேண்டும். கோயிற் பூனை தேவரை மதியாதென்ற பழமொழி சிந்திக்கற்பாற்று.

சுமார் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரியார் திருப்புகழிலே பல இடங்களில் இவ்வுண்மையை வடித்துள்ளார்.

**அரவு புனைதரு புநிதரும் வழிபட**
**மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்**
**அறிவை யறிவது பொருளென அருளிய**
**பெருமாளே** — (திருப்புகழ்—509 குமரகுருபர)

இதன் பொருள்:— பாம்பை ஆபரணமாகக் கொண்ட பரிசுத்தமூர்த்தியாம் சிவனும் வழிபட்டு(வணங்க) உனது மதலை மொழியால் அவர் தெளிவுபெற (நன்குஉணர) ஒளிமயமாம் அறிவை அறிவதுதான் பொருள் என்பது என்று அவருக்கு உணர்த்திய பெருமாளே.

ஈசனுடன் ஞானமொழி பேசிய முருகன் குமரகுருபரனாகத் திகழ்கின்றான். தந்தைக்கு உபதேசம் செய்த சாமியைத் தகப்பன் சாமி என்பர். இந்த அறிவை அறிவதுதான் பொருள் என உணர்த்திய (பெரும் +ஆள்) பெருமாள் முருகன். ஓங்காரத்துட்பொருளை **ஐயனெனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே** என்பது திருவாசக வாக்கு.

**அகலிய புராணமும் ப்ரபஞ்ச**
**சகலகலை நூல்களும் பரந்த**
**அருமறைய நேக முங்குவிந்தும் — அறியாத**

விரிவான புராணங்களும், உலகில் உள்ள சகல கலை நூல்களும் விரிந்துள்ள அரிய மறைநூல்கள் (வேதம் முதலிய மறைநூல்கள்) பலவும் ஆக இவையெல்லாம் ஒன்று கூடிச் சேர்ந்து முயன்றும் அறிய முடியாத

(44ம் பக்கம் பார்க்க)

**அறிவு மறி யாமை யுங்கடந்த**
**அறிவுதிரு மேனியென்று ணர்ந்துன்**
**அருணசர ணார விந்த மென்று —**
**அடைவேனோ**

—திருப்புகழ் 1019

அறிவு அறியாமை ஆகிய இரண்டையும் கடந்த அறிவு எதுவோ அதுவே உனது திருமேனியாகும் என நான் உணர்ந்து, உன்னுடைய சிவந்த தாமரை போன்ற திருவடியை என்று சேர்வேனோ. அறிவும், அறியாமையும் கடந்த

# யோகசுவாமிகள் ஆன்மிக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம்

வித்துவான் க.ந.வேலன் (சென்ற இதழ் தொடர்ச்சி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

யோகசுவாமிகள் துறவறத்துக்கு ஓர் இலக்கணமாய் தூய துறவறத்துக்கு ஓர் எல்லையாய் மிளிர்ந்தவர். அவர் தோற்றத்தைப் பார்த்து அவர் ஒரு சாமியார், ஒரு துறவி என்று கணிக்கமுடியாது. ஈழத்து வடபகுதியில் வாழும் சாதாரண ஒரு மனிதனைப் போலவே காட்சி அளிப்பார்.

துறவிகள் இப்படித்தான் இருப்பார்கள் என்ற உணர்வு குடிகொண்டுள்ள மக்கள் மத்தியில்

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த தொழித்து விடின்**

என்னும் வள்ளுவத்துக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர். இந்தத்தூய துறவின் ஊற்றாக விளங்கியவர் சுவாமிகளின் குருநாதனாகிய செல்லப்பா சுவாமிகளாகும். சுவாமியின் அகம் புறமாகிய ஞானத் தோற்றத்தை வழங்கியவரும் அவரே. இதன் மூலம் இந்து சமயத்துறவறத்திலே ஒரு மாபெரும் புரட்சியே நடைபெற்றுவிட்டது. இன்று சிலதுறவிகளால் பரிகாசத்துக்கு இடமாக-விட்ட துறவறத்துக்குச் சுவாமிகள் காட்டியவழியே மாற்றுமருந்தாகும்.

நீத்தார் பெருமையைத் தெய்வத்தோடு ஒப்ப வைத்துப் பாயிரத்தில் பாராட்டிய வள்ளுவர், அவர் இயல்பினைத் துறவறத்தில் விளக்கியுள்ளார். அந்த விளக்கத்துக்குச் செயல்வடிவம் கொடுத்துப் பெருந்தாக்கத்தினைச் சுவாமிகள் ஏற்படுத்தியுள்ளார்.

இன்று துறவிகள், சமயவாதிகள், தம் புறத்தோற்றத்தால் தம் தூய துறவையல்ல, தம் சமயத்தைப் பறைசாற்றுகின்றனர். இதுவே பலரது கூடா ஒழுக்கத்துக்கு நல்ல போர்வையுமாகின்றது.

சுவாமிகளின் மரபு, சித்தர்மரபு .

**கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கியவர்கள்.**

கந்தைமிகையாம் என்னும் கருத்துடையவர்கள். செல்லப்பா சுவாமிகளைப் பற்றிக்கூறும் சுவாமிகள்

**வேடம் விரும்பிலர்**
**கறுத்தமேனியர் கந்தைத்துணியினர்**
**கோலமொன்றும் விரும்பிலர்**
**ஆரகத்திலும் சென்றவர் உண்கிலர்**
**விற்றூண் அறியாதான்**
**ஒருசோறும் ஒரு கறியும் ஆக்கியுண்ணுமாசான்**
**நீறணியான் காவியுடையணியான்** என்றிங்ஙனம் கூறுவார். தமது குருநாதனைப் போலவே சுவாமிகளும் எளிமையாக வாழ்ந்துவந்தார்.

பக்தர்கள், அடியார்கள் என்று வருபவர் எல்லோரையும் அவர்தரும் காணிக்கைகளையும் தம் குருநாதரைப் போலவே ஏற்கமறுத்து ஏசித்துரத்திய சந்தர்ப்பங்கள் பல. உலகியல் போலத் துறவியலில் இணங்கி, அனுசரித்துப் போகும் போக்குக்கு இடமேது? அங்ஙனம் இணங்கிப் போயிருந்தால் போலிகளின் உறவும் அதனால் பெரும் பொருளும் குவிந்திருக்கும்.

சித்துக்கள் செய்யவல்ல தெய்விக ஆற்றலிருந்தபோதும் குருவும் சீடனும் அதை ஒரு வழியாகப் பயன்படுத்தவில்லை.

**இட்ட சித்திகள் எய்தவும் விட்டிலன்**

சித்துக்கள் செய்து மக்களை மயக்கக் கூடாது என்பதே குருவின் கட்டளையாகும்.

செல்லப்பா சுவாமிகள்,

**வருவார் போவாரை ஆசான்-வாயால்**
**வையாமல் வைதுவிடக் கூசான்.**
**கும்பிடச் சால அன்புடன் தான் வரும் பக்தரைக்**
**கால னென்னக் கறுத்துடன் சீறுவான்**

**வீதியிற் செலும் வீணர்கள் தங்களைப் போதிக்கும் படி வேண்டியே பேசுவார்**
குருவைப் போலவே சீடனும் வெறும் வீணர்கள் நெருங்குவதை அனுமதிக்கவில்லை. ஏனெனில்
**வெறும் வீணன் எத்தனை வித்தைகற்றாலும் தறுகுறும்பானவை தான் தீரானே**
என்று அவரே பாடியுள்ளார்.

நல்லூர் வீதியில் சமையல் நடந்து கொண்டிருக்கிறது. சீடர்கூட்டம் வாயூறக் காத்துநிற்கிறது. தீடீரெனவந்த செல்லப்பா சுவாமிகள், ஒரு தடியால் சமையல் பானைகளை அடித்து நொருக்குகிறார். வெந்ததும் வேகாததுமான உணவுகள் சிதறுகின்றன.
**அவா என்பது தவாப் பிறப்பீனும் வித்து**
**ஆரா இயற்கை அவா**
இந்த உண்மைகளையே சுவாமிகள் அன்று உணர்த்தினார்கள்.
**சிவதொண்டன்நிலையத்துக்குள்**
**காவியுடுத்துக்கொண்டு கந்தசாமியார்**
**(நல்லூர்க்கந்தன்) வந்தாலும் உள்ளேவிடாதே**
என்று உத்தரவுபோட்டுவிட்டவர் யோகசுவாமிகள்.
இங்ஙனம் தூய துறவொழுக்கத்தால் இந்த நூற்றாண்டின் துறவொழுக்கத்துக்குத் தாம் வரம்பாகிய காட்சியர்.

சுவாமிகளைச் சூழவந்தவர்கள் ஆசாபாசங்களில் உழலும் இல்லறத்தவரே. **செய்தவினை இருக்கத் தெய்வத்தை நோபவர்கள். அறும்பாவமென்று அன்று இடாதவர்கள்.** இன்று வெறும்பானை பொங்க வேண்டுமென்னும் மாயாஜாலத்தை எதிர்பார்ப்பவர்கள்.

ஒருவன் பற்றை முற்றாகத் துறந்து ஒருபக்கத்தே ஒதுங்கியிருந்தாலும் இந்த உலகம் விடாது. எதுவுமற்ற அவனிடம் உலகம் எதை எதிர்பார்க்கிறது? உலகப் பொருள்களை. சுவாமி எதாவது சொல்லுங்கோ, சொல்லுங்கோ என்று அவன்வாயைக்கிளறும். அவனும் ஏமாந்து ஏதும் சொல்லத் தொடங்கிவிட்டால், கொழுவிக்கொள்ளும், இது சுவாமிகள் சொன்ன ஒரு செய்தி. சூழவந்த இல்லறத்தார் தமது பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவே வந்தனர்.

அவர்களுக்குச் சுவாமிகள் வழங்கிய பிரசாதம், வள்ளுவர் ஔவை போன்றவர்கள் கூறிய இல்லற நெறிகளைப் பின்பற்றுமாறும் விதிப்பயனை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ள வேண்டு மென்பதுமாகும்.இல்லறம் என்னும் தலைப்பிட்டுப் பாடிய பத்துக் குறட்பாக்களில் சுருக்கமாக ஆனால் ஆழமாக அருளுரை வழங்கியுள்ளார். நல்லாறு இல்லறமேயென்றும் எல்லா அறங்களிலும் மேலானது இதுவே என்றும் தானம், தவம், இரண்டும் ஆற்ற வல்லதாயிருப்பதால் இதுவே ஞான அறமென்றும் அரனும் உமையும் நின்ற நெறி இல்லறமே என்றும் சனகன் போன்ற இராச யோகியர் கடைப்பிடித்தநெறி இதுவே என்றும் இல்லறத்தில் நின்ற ஏந்திழையாள், **சூரியனே உதிக்காதே நில்** என்றாள். அது நின்றதென்றும் இல்லறத்தின் பெருமைகளை எடுத்தியம்பியுள்ளார். சுவாமிகள் விதைத்த ஞானவிதை முளைத்துப் பயிராகி விளைவுதரும். அதற்கேற்றகாலம் கனிந்து கொண்டிருக்கிறது. அவர் மதப்பிரசாரமோ, பிரசங்கமோ செய்யவில்லை. அவர் வாழ்ந்து காட்டினார். அவ்வப்போது சற்பாத்திரத்தில் போட்டுவைத்தார். நற்சிந்தனையாக எழுதிவைத்தார்.
அவர் அருளிய நற்சிந்தனைகள், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளும் தரவல்லன. அவர்சிந்தனைகள், சாத்திரம், தோத்திரம், சமயம், அறம், யோகம் முதலியன பற்றி இக்காலத்துக்கு ஏற்ற விளக்கங்கள் கொண்டிருக்கின்றன.

இந்து சமயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்னும் நோக்கம் சுவாமிகளுக்கு இல்லை. ஆனால் அவர்சிந்தனைகளும் வாழ்வும் அமைதியான மாபெருந்தாக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. அவரது குருநாதர் அருளிய மகாவாக்கியங்கள் நான்கிற்கும் நற்சிந்தனையும் சுவாமிகளின் வாழ்க்கையும் விளக்கமாக

அமைந்துள்ள. இராமகிருஷ்ண குருவின் அனுபூதியைச் சீடராகிய சுவாமி விவேகானந்தர் விளக்கியது போல - அது அக்கால இந்தியாவின் தேவையாயிருந்தது போல- செல்லப்பாசுவாமிகளின் அனுபூதிச் செல்வத்தை அவரது சீடராகிய யோக சுவாமிகள் விளக்கியுள்ளார். அது இக்கால இலங்கையின் தேவை, இலங்கையின் இந்துசமயத்தின், சைவத்தின் தேவை.

சைவம் பிறமதக் காழ்ப்பற்ற தன்மையைப் போற்றிவந்துள்ளது. மதமாற்றத்தை விரும்பாதது. பிற மதங்களையும் அனுசரித்துப் போகும் தன்மை உடையது.

நடைபெற்ற சில மதப்போராட்டங்களெல்லாம், பிறமதத்தினர் ஊடுருவல் செய்து இந்து சமயத்தினரை மாற்ற முயன்றபோது ஏற்பட்ட தற்காப்புப் போராட்டங்களேயாகும். பிற மதங்கள் இந்து தேசத்தில் புகுந்து அழிவுகள் செய்த போது இந்து மதம் அந்நிய தேசங்களில் எவ்விததீங்கும் செய்ததில்லை. சமண, பௌத்த மதங்கள் தமிழ்நாட்டில் புகுந்து அரசர்களுடைய செல்வாக்கால் மதமாற்றம் செய்தபோது சைவம் அதனைப் பக்தி நெறியால் புறங்கண்டது. சைவ சித்தாந்தம், தத்துவ விளக்கத்தில் கடவுளை ஏற்காத உலகாயதர்களைக் கூட அவர்களும் ஒரு நிலையில் நிற்கிறார்கள் என ஏற்றுக் கொண்டுள்ளது. தாயுமானவர் சைவ சமரசத்தின் கொடுமுடியைக் காட்டியவர். தாயுமானவரிடம் மிகுந்த ஈடுபாடுகொண்ட யோகசுவாமிகள், அவர்கருத்தைப் பல இடங்களில் போற்றியுள்ளார்.

இவற்றால் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பல முஸ்லீம் அன்பர்கள் அவருடைய அடியாராக வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த புகழ்வாய்ந்த நீதிபதி அக்பர் மிக்க பக்தியுடைய ஒரு பக்தராவார்.

தென்னிலங்கையிலிருந்து பல சிங்கள பௌத்த அன்பர்கள் அவரைத் தரிசிக்க வருவதுண்டு. அவரோடு தமக்கேற்பட்ட ஆன்மிக அனுபவங்களை ஆங்கிலத்தில் நூலாக எழுதி வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் தேசாதிபதியாகவிருந்த சோல்பரியின் புதல்வரான ஆங்கிலேயர், சுப்பிரமுனிய சுவாமியென அழைக்கப்படும் ஹவாயைச் சேர்ந்த அமெரிக்கத் துறவி முதலியோர் சூவமிகளின் சீடராயினர். ஹவாயில் சைவ சித்தாந்த ஆச்சிரமமமைத்துப் பணி புரிந்துவரும் சுப்பிரமுனிய சுவாமிகள்,(அவர் இன்று சமாதி அடைந்துவிட்டார்) யோகசுவாமிகளின் திருவுருவத்தை ஊர்வலமாக எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் கொழும்புத் துறையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் சிவயோகசுவாமிகள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவுகளேயாகும்.

-முற்றும்-



யோகர்சுவாமிகள்

# PRIME FOOD & WINE




## 118 High Street, Tooting, London SW17 0RR
## telephone 020 8672 3777 fax 020 8672 3342

## Groceries, Vegetables & Fruits, and phone cards........

சகலவிதமான மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள்
பழ வகைகள், இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்
பொருட்கள் மற்றும் சகலவிதமான உள்நாட்டு வெளிநாட்டு
குடிவகைகள்.......
உட்பட உங்கள் அனைத்து நுகர்வுத்தேவைகளையும் பூர்த்தி செய்ய....

# மனித வாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

ஜோதிடபூஷணம் துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்

சென்ற தொடரில் ஜென்மலக்னம் பற்றி இந்த தொடரில் ஆராய்வோம் என்று குறிப்பிட்டிருந்தேன். அதற்கு முன் பிறந்த நக்ஷத்திரங்கள் பற்றி முதலில் குறிப்பிடுவோம். நாம் பிறக்கின்ற போது அமைகின்ற நக்ஷத்திரம், அதன்பலன், அதன் குணாதிசயம் என்பன பற்றி முதலில் ஆராய்வோம். மொத்தம் 27 நக்ஷத்திரங்கள் உண்டு இந்த நக்ஷத்திரங்களின் தன்மைகள் குணாதிசயம் என்பனவற்றை சற்று அறிந்து கொள்வோம்.

(1) **அஸ்வினி நக்ஷத்திரம்:-** இதன் அதிபதிக்கிரஹம் கேது. அதிஷ்டரத்தினக்கல் வைடூரியம். பொதுவாக இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் அழகு, கவர்ச்சி மிக்கவர்கள். சாந்த குணமும், தயாள குணமும் நிறைந்தவர்கள். அறிவாற்றல் மிகவும் நிறைந்து காணப்படுபவர்கள். விடயங்களில் முதன்மைபெற வேண்டும் என்கின்ற துடிப்பு நிறைந்தவர்கள். தன்னம்பிக்கை நிறைந்தவர்கள். தைரியமும், செயல்திறனும் இவர்களிடம் நிறையவே உண்டு அவசர புத்தி அதிகம் கொண்ட குணஇயல்பு உண்டு. எடுத்தவுடன் நிதானத்தை இவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. தாங்கள் எடுக்கின்ற அவசரபுத்தி செயல்பாட்டை பின்பே யோசித்து வருந்துவார்கள். இந்த நக்ஷத்திரத்தின் நான்கு பாதங்களும் மேஷராசியில் அடங்கும்.

**(2) பரணி நக்ஷத்திரம்:-** இதன் அதிபதிக் கிரஹம் சுக்கிரன். அதிஷ்ட ரத்தினக்கல் வைரம். பொதுவாக இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் நேர்மை நிறைந்தவர்கள். வாக்குத் தவறாத செயற்பாடு கொண்டவர்கள். ஈவிரக்கம் கொண்டவர்கள். பிறரை எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றல் கொண்டவர்கள். மிகுந்த செல்வம் நிறைந்து காணப்படுவர்கள். எப்பொழுதும் சுற்றுப்பயணம் செய்ய விரும்புவர். பெண்களின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற சுபாவம் கொண்டவர்கள். திடீர் திடீரெனக் கோபம் கொள்ளும் குணம் கொண்டவர்கள். ஆளுமைத்திறன் மிகவும் அதிகமாக இவர்களிடம் இருக்கும். பரணியில் பிறந்தோர் தரணி ஆள்பவர்கள் என்கின்ற ஜோதிடமொழி உண்டு. இந்த நக்ஷத்திரத்தின் நான்கு பாதங்களும் மேஷராசியில் அடங்கும்.

**(3)கார்த்திகை நக்ஷத்திரம்:-** இதன் அதிபதிக் கிரஹம் சூரியன். அதிஷ்ட ரத்தினக்கல் மாணிக்கம். பொதுவாகவே இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் சற்று நயவஞ்சகத் தன்மை உடையவர்கள். பொய்போசி வாழ்வதில் ஒரு இன்பம் காண்பவர்கள். எடுக்கின்ற முயற்சிகளிலும் தம்மை விஞ்சி ஒருவர் வளர்வதை பொறுக்கமாட்டார்கள். அறிவு ஆற்றல் போன்றவற்றில் அதிக திறமை உள்ளவர்கள். வாழ்வில் பலவிதமான முன்னேற்றங்களை அடைய வேண்டும் என்கின்ற ஆர்வம் உள்ளவர்கள். நினைக்கின்ற விடயத்தை சாதிப்பதற்காக எதையும் செய்யத் துணிவு கொண்டவர்கள். இவர்களின் வாழ்க்கை போராட்டம் வாய்ந்த தன்மையாக இருக்கும். 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் மேஷராசியும், 2ஆம், 3ஆம், 4ஆம் பாதத்தில் பிற்ந்தவர்கள் இடபராசியும் அமையப் பெற்றவர்கள்.

**(4)ரோகிணி நக்ஷத்திரம்:-** இதன் அதிபதிக்கிரஹம் சந்திரன், அதிஷ்ட ரத்தினக்கல் முத்து. பொதுவாகவே இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் கல்வி அறிவு அதிகமாய் உள்ளவர்கள். கருணை உள்ளம் கொண்டவர்கள். யாருக்கும் கட்டுப்படாதவர்கள். பேச்சில் இனிமையிருக்கும். திடமனம் உடையவர்கள். சொன்ன சொல் தவறாதவர்கள். உண்மை மிக்கவர்கள். நீண்ட தூரம் நடக்கின்ற ஆற்றல் உடையவர்கள். பல விடயங்களையும், நன்றாக ஆராய்ந்து வைத்திருப்பவர்கள். முற்பகுதி வாழ்க்கை சற்று போராட்டம் நிறைந்ததாக இருக்கும். விடயங்களில்

நல்ல ஆளுமைத்திறன் இருக்கும். இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் நான்கு பாதமும் ரிஷபராசியில் அடங்கும்.

**(5)மிருகசீரிடம் நக்ஷத்திரம்:-** இதன் அதிபதிக் கிரஹம் செவ்வாய். அதிஷ்ட ரத்தினம் பவம். பொதுவாகவே இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் அறிவு, ஆற்றல் மிக்ககவர்கள். சிறந்த சங்கீத கலா ரசிகர். கல்வி நிலையில் ஏதோ ஒரு வகையினிலே மேம்பாடு நிறைந்து காணப்படுபவர். சற்று நயவஞ்சகமாகன எண்ணம், செயல் உள்மனதில் கொண்டவர்கள். மனதில் உள்ளதை யாரும் எளிதில் அறிய முடியாத மௌன எண்ணம் நிறைந்தவர்களாவர். நினைத்த விடயத்தை முடிக்கவேண்டும் என்கிற தீவிர எண்ணம் உடையவர்கள். வலிமையான தேகநிலை உடையவர்கள் இந்த நக்ஷத்திரதின் 1ஆம், 2ஆம் பாதம் இடப ராசியிலும், 3 ஆம், 4ஆம் பாதம் மிதுன ராசியிலும் அடஙகும்.

**(6)திருவாதிரை நக்ஷத்திரம்:-** இதன் அதிபதிக்கிரஹம் ராகு. அதிஷ்ட ரத்தினக்கல் கோமேதகம். பொதுவாகவே இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் அறிவு ஆற்றல் நிரம்ப பெற்றவர்கள். கபடத்தனமான செயல்கள் புரிவதில் வல்லுனர். உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுகின்ற சுபாவம் உடையவர்கள். இரக்க குணம் கொண்டவர்கள். குடும்பநிலையில் ஏதேனும் சிறு குழப்ப நிலை கொண்டவர்கள். தொழில் ரீதியில் நல்ல ஆளுமையும் எடுக்கின்ற முயற்சிகளில் சிறந்த நிதானமான போக்கும் உள்ளவர்கள். பணவிடயங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவர். குலம், ஆசாரம் என்பனவற்றை கடைப்பிடிக்கும் தன்மை உள்ளவர்கள். தாம் நினைக்கின்ற விடயங்களை எப்படியும் சாதித்து விடும் ஆற்றலும், ஆளுமையும் கொண்டவர்கள். நான்கு பாதமும் மிதுனராசியில் அடங்கும்.

**(7)புனர்பூச நக்ஷத்திரம்:-** இதன் அதிபதிக்கிரஹம் குரு அதிஷ்ட ரத்தினக்கல் புஷ்பராகம். இந்த நக்ஷத்திரத்லே பிறந்தவர்கள் தற்பெருமை அதிகம் கொண்டவர்கள். பேச்சாற்றல் அதிகம் இருக்கும். மற்றவர்களை நன்றாக புரிந்து கொள்கின்ற தன்மை உடையவர்கள். மனதிலே நல்ல திடகாத்திரமும் உறுதியும் கொண்டவர்கள். எப்பொழுதுமே சுறுசுறுப்புடன் ஏதாவது செய்து கொண்டே இருப்பார்கள். மற்றவர்கள் அறியாதவாறும் ஏதேனும் தொழில் புரிவார்கள். உழைப்பிற்கு சலிக்கவே மாட்டார்கள் உடல் ரீதியில் ஏதேனும் ஒரு வியாதி இருந்துகொண்டேயிருக்கும். மற்றவர்களுக்கு உதவுகின்ற மனம் உடையவர்கள். இந்த நக்ஷத்திரத்தின் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் மிதுனராசியிலும் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் கடகராசியும் உடைய அன்பர்களாவார்கள்.

**(8)பூசம் நக்ஷத்திரம்:-** இதன் அதிபதி சனி. அதிஷ்ட ரத்தினக்கல் நீலக்கல். இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் கலை ஆர்வம் மிக்கவர்கள் எந்த விடயத்தையும் சமயோசிதமாக செயற்படுத்துகின்ற ஆளுமைத்திறன் உடையவர்கள். பெற்றோரை அதிகமாக நேசிப்பவர்கள். கடவுள் பக்தி அதிகமாய் உள்ளவர்கள். பசி தாங்கமாட்டார்கள். நீண்ட உடலும் அழகிய தோற்றமும் உடையவர்கள். சமுகத்திலோ குடும்பத்திலோ ஏதோ ஒரு வகையில் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய பலன் உள்ளவர்கள். கடத்தனமான செயற்பாடுகள் சற்று அதிகமாகக் கொண்டவர்கள். உள் ஒன்று வைத்து புறம் ஒன்று செய்கின்ற தன்மைகள் இவர்களிடம் அதிகம் இருக்கும். இந்த நக்ஷத்திரத்தின் நான்கு பாதங்களும் கடகராசியில் அடங்கும்.

**(9)ஆயிலிய நக்ஷத்திரம்:-** அதிபதிக்கிரஹம் புதன். அதிஷ்ட ரத்தினக்கல் மரகதம். இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் தைரியம் நிரம்பப் பெற்றவர்கள். எதிரியை வெல்லுகின்ற ஆளுமைத்திறன் மிக அதிகமாக இருக்கும். கடவுள் பக்தி மிக அதிகம் கொண்டவர்கள். கல்வி

(32ம் பக்கம் பார்க்க)


SUN TV யின்
இனிய தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
Pay for SUN TV
Enjoy KTV
£180 £144*
Dish & Decoder anywhere in uk only £149* with installation
தொடர்புகளுக்கு:
0208 33 56780
www.suntvuk.com
உலகுக்கு ஓர் சூரியன் உலகத்தமிழருக்கும் ஓர் சூரியன்
*Terms & Conditions Apply, This offer is not in Conjunction with any Existing Offer.

# M. K. SRI & Co

## Solicitors & Administrators of Oaths

**2C, Fairholme Road (Off Station Road)**
**Harrow, Middlesex, HA1 2TN**

**Tel: 020 8515 7000 (4 lines)**
**Fax: 020 8515 7030**
**Fax: 020 8515 7031** (For Conveyancing only)
DX: 4232 Harrow (1)

## We specialise in

- Immigration
- Crime
- Conveyancing
- Matrimonial
- Traffic Offences
- State Benefits
- Wills & Probate
- Employment
- Advice & Assistance at Police Station

## Legal aid work undertaken

**We Are Franchised by the Legal Services Commission in Immigration**

**PARTNERS:**
M. K. SRITHARAN
S. SIVASANTHIRAN

**ASSISTANT SOLICITOR:**
SELVI RAVINDRAN

**TRAINEE SOLICITORS:**
AVTAR MANKU
V.KARUNASAAGARAR
T.JOGANATHAN

**Our New Service:**

## Work Permit Scheme Advantages

* To enter work and live in the UK through the Work Permit Scheme
* Applies to all whether in the UK or in any part of the world
* Switching allowed from Visitor, Student and Dependant Visas
* Change of Employment afterword is possible
* Permanent Residency in the UK is possible after 4 years of work permit employment

**CONSULTANTS:**
INDRA SEBASTIAN LLM &
MANNAN THANGARAJAH LLM

# தமிழரின் தொன்மையான யோகக்கலையும் உடல்-உள நலமும்

**"வானதி "** (வைத்தியகலாநிதி இரத்தினராஜா)

யோகக்கலை இந்தியாவிற்கே உரியதான ஒரு கலை. இதில் பலவகையான யோகப் பிரிவுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் (வடமொழியில்- பக்தியோகம் போன்றவை) தமிழில் தான் நமது சித்தர்களால், முக்கியமாக **திருமூலரினால்** தான் இந்த யோகக்கலை விஞ்ஞான ரீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.
(இதற்காகவாவது எமது புதியதலைமுறையினர் தமிழைப்படிக்கவேண்டும்!)

பிராணாயாமம் எனஅழைக்கப்படும் மூச்சுப் பயிற்சிசெய்வதால் **துள்ளி நடக்கும் சோம்பி தவிர்க்கும்,........................ உள்ளது சொன்னோம் உணர்வுடையவருக்கே** என்று திருமூலர் சொல்கிறார். அதாவது (வயோதிபர் கூட) துள்ளி நடப்பர். சோம்பல் இன்றி இருப்பார். (சைவ முன்னேற்றச் சங்கத்தில் சுறுசுறுப்பாக சேவை செய்யும் தொண்டர்களும் இந்த யோகாசனப் பயிற்சியால்தான் துள்ளி நடக்கிறார்களோ என்னவோ! மேடையில் பேசும் துணிச்சல்கூட தனக்கு யோகாசனம் செய்வதால் தான் வந்தது என்று ஒரு தொண்டர் பணிவுடன் கூறினார்)
பிராணாயாமம் செய்வதனால் பிராணவாயு என அழைக்கப்படும் (oxygen) ஒக்சிசனை ஆழமாக மூச்சு எடுத்து நீண்டநேரம் மூச்சைப்பிடித்து பின் வெளிவிடுவதனால் எமது உடம்பில் உள்ள கூடாத கழிவுகள் அகற்றப்பட்டு, கிருமிகள் அழிக்கப்பட்டு எமது உடலில் உள்ள சிறிய கலங்கள் திருத்தப்பட்டு உடல் நோய் குறைகிறது. இந்த மூச்சுப்
பயிற்சியினால் மன உழைச்சல் (Stress) குறைகிறது-நீங்குகிறது. அத்துடன் (Stress related diseases) இந்த மன உழைச்சலுடன் சம்பத்தப்பட்ட வருத்தங்களாகிய இரத்த அழுத்தம், இருதயநோய், சக்கரைவியாதி ஆகிய நோய்கள் கூட இந்த யோகப் பயிற்சியால் குறைகிறது. இன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் இந்த வியாதிகளால் பாதிக்கப்பட்டு மிகவும் இளவயதிலேயே (அவர்களின் பாட்டன் பாட்டி உயிருடன் இருக்கும் போதே) இறப்பைத் தழுவிக்கொள்ளும் பரிதாப நிலைக்கு ஆளாக வேண்டியுள்ளது என்பதை அறியும்போது மிகவும் மனவருத்தமாக இருக்கிறது.
இதற்கு முக்கிய காரணம்

தவறான உணவு- வாழ்க்கைமுறைகள் தான்
**ஒரு வேளை உண்பவன்- யோகி**
**இரு வேளை உண்பவன்-போகி**
(போகங்களை அனுபவிப்பவன்- உதாரணம் குடும்பஸ்தன்)
**மூன்று வேளை உண்பன்-ரோகி** (நோயாளி)
என்று கூறக்கேட்டிருக்கின்றேன்.

ஒரு நாளைக்கு எத்தனை வேளை நாம் உண்கின்றோம்?! சிந்தித்துப் பாருங்கள். பல சமயம் நாம் நேரம் காலம் என்று இல்லாமல் தொடர்ந்து உண்கின்றோம் அல்லவா? எனவே எங்கள் நிலை என்ன? யோகப்பயிற்சி மனக் கட்டுப்பாட்டை கொடுக்கிறது. இந்த யோகப் பயிற்சி ஓடுவது, ஆடுவது போன்ற (விரைவு) உடற்பயிற்சிகள் போல வயிற்றுப் பசியைக் கூட்டுவது அல்ல. யோகப் பயிற்சி செய்பவர்களுக்கு எவ்வளவு உணவு உண்டால் நாம் உயிர்வாழப் போதுமானதோ அவ்வளவு பசிமட்டுமே எடுக்கும். எனவே ஊழைச் சதை வைப்பதைத் தடுக்கும்.

யோகாசனத்தில் (84,00,000) எண்பத்திநாலு இலட்சம் ஆசனங்கள் இருப்பதாக யோகாசனப் பேராசிரியர் யோகாசன ஆண்டியப்பன் கூறுகிறார். (இவர் T.T.N. தமிழ் ஒளி தொலைக்காட்சியில் இலண்டன் நேரம் காலை 6.30 மணிக்கு ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் யோகாசனப் பயிற்சியை அளிக்கிறார். இதனை பார்த்துப் பழகி

எம்மவர்கள் பயனடைவார்களாக) அன்று மனிதனுக்கு வரும் வியாதிகளை (4448) நாலாயிரத்து நாநூற்று நாற்பத்தியெட்டு வியாதிகளாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு வருத்தத்துக்கும் வருத்தம் வராமல் தடுக்கவும் வந்தபின் மாற்றுவதற்குமாக பல்வேறு ஆசனங்கள் உள்ளன. உதாரணமாக:–

**வில் ஆசனம்**– சலரோகத்திற்கு (Diabetes),

**பூனை ஆசனம்**–இடுப்புவலிக்கு (Back Pain),

**சிரசானம்**(செய்யமுடியாதவர்களுக்கு அர்த்த சிரசாசனம்) –ஞாபகசக்திக்கு, (மூளைக்கு இரத்தப்போக்குவரத்து அதிகரிக்க.)

**தூளி ஆசனம்**–வயிற்று சதையைக் குறைக்க

**கோமுக யோக முத்திரை**–கோபத்தைத் தணிக்க

இப்படியாக ஒவ்வொரு வருத்தத்துக்கும் ஒவ்வொரு ஆசனமாக சொல்லிக்கொண்டே போகலாம்.


நான் ஒரு வைத்தியராக இல்லாது விட்டால் இந்த யோகக் கலையின் மகிமையை, நன்மைகளை மருத்துவ ரீதியாக உணர்ந்திருப்பேனோ என்னவோ?

இன்றைய மேலைத்தேய வைத்தியம், நோய் வந்தபின் குணமாக்கும்– குணமாக்க முனையும், **வந்தபின் காப்பபோன்** ஆகும். ஆனால் எமது யோகக் கலையோ **வருமுன் காப்போன்** ஆகும். யோகக் கலை, நோய் வராமல் தடுப்பது– எமக்கு நோய்த் தடுப்பு சக்தியை தரவல்லது. அதிலும் இளஞ்சூரிய வெய்யிலில் யோகாசனம் செய்தால் நோய் தடுப்பு சக்தியை அதிகமாக்கும். இந்த யோகாசனத்தை இளவயதிலேயே பயின்று தொடர்ந்து பயிலுபவர்களுக்கு வயோதிபம் வருவதில்லை. வயோதிபம் பின்போடப்படுகிறது. நான் G.C.S.C.(A/L) படிக்கும்போது இந்தியாவில் இருந்து எமது பாடசாலைக்கு ஒரு யோகி வந்திருந்தார். அவரின் வயதைக் உத்தேசித்துச் சொல்லும்படி எல்லா மாணவர்களையும் கேட்டார்கள். நாம் எல்லோரும் கூடுதலாக 35 முப்பத்தைந்து வயது தான் மதிப்பிட்டோம்.ஆனால் அவருக்குவயது 70. அவரின் உடம்பில்–தோலில் ஒரு சுருக்கம்கூட இல்லை. மாலை வெய்யிலில் அவர் உடம்பு பளபளத்தது. அவர் பத்மாசனத்தில் அமர்ந்திருந்தார். அவர் பக்கத்தில் அரைப் போத்தல் நல்லெண்ணெய் இருந்தது. அவர் ஒவ்வொரு நாளும் அரைப்போத்தல் நல்லெண்ணெய் குடிப்பதாகக் கூறியனார். எண்ணெய் என்றவுடன் கொலஸ்ரோல் என்று பதறாதீர்கள். **நல்லெண்ணெய்** என்ற பெயரைப் பாருங்கள். அந்தக் காலத்தில் தமிழர்கள் **எள் எண்ணெய்** என்று கூறவில்லை. அதை நல்லெண்ணெய் என்றே கூறினார்கள். நாம் நல்லெண்ணெயை அருந்தும் பொழுது அருந்தும் எண்ணெய் **நல்லகொழுப்பாக (H.D.L)** மாறுகிறது. இதேதன்மை மீனில்உள்ள எண்ணெய்க்கும் உண்டு. (அதை சொல்கின்றேன் என்பதற்காக உடல் உழைப்பு செய்யாதவர்கள் அரைப் போத்தல் நல்லெண்ணெயைக் குடிக்காதீர்கள்!) ஆனால் உணவுடன் சேர்க்கவேண்டியது நல்லெண்ணெய் ஆகும். உடற்பயிற்சி செய்யும்போதும் இந்த நல்லகொழுப்புக் கூடுகின்றது. அந்த எழுபது வயது யோகி முப்பத்தைந்து வயது வாலிபர் போல் தோன்றினார் என்றால் அது யோகாசனம் கொடுத்த **யோகம்** தான் என்றால் மிகையாகாது. யோகக் கலையைப் பயில எமக்கு ஒரு பிராப்தம்(யோகம்) வேண்டுமென்று சொல்லுவார்கள். இந்த வகையில் பார்த்தால் இந்த பிராப்தம் (யோகம்) மேலை நாட்டினருக்குத்தான் கூடுதலாக உண்டு போலும். இன்று அமெரிக்கா, சீனா ஆகிய நாட்டுமக்கள் அதிக அளவில் ஊக்கத்துடன் இந்த யோகக் கலையைப் பழகிப் பயனடைகிறார்கள்.

குடிப்பழக்கம், போதைப் பொருட்கள் பாவிப்பவர்கள் அவற்றைப் பாவிப்பதன் மூலம் சந்தோசம் (களிப்பு) அடைவதாக கூறுகிறார்கள். ஆனால் **கள்ளுண்ண வேண்டாம் தானே களிதரும்....... உள்ளது சொன்னோம் உணர்வுடையருக்கே!**

என்று திருமூலர் சொல்லுகின்றார்.

45ம் பக்கம் பார்க்க...



KRS
Oriental Store
33 Lee High Street
Lewisham
London SE13 5NS
தரமான இலங்கை, இந்திய
உணவுப்பொருட்கள் உடன்
மரக்கறி வகைகள்
ஓடியோ, சீடி, வீடியோ
அனைத்தையும் நியாயமான
விலையில் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
Telephone
020 8297 9432

# குருக்ஷேத்திரம்

## டாக்டர் கதிர்காமநாதன் (பயணக்கட்டுரை)




**கிருஷ்ணபகவான் பகவத்கீதையின் முதல் சுலோகத்தில் குருக்ஷேத்திரத்தை தர்மக்ஷேத்திரம் எனக்கூறியுள்ளார்.**

நான் குருக்ஷேத்திரம் செல்வேன் குருக்ஷேத்திரத்தில் வசிக்கின்றேன், என்று கூறுபவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து முத்தியடைவார்கள்– மகாபாரதம்

குருக்ஷேத்திரம் பாண்டவ கௌரவசேனைகள் போர் செய்த இடம். சமீபத்தில்தான் இவ்விடம் இந்தியாவின் வடபகுதியிலுள்ள ஹரியானாவில் இருக்கிறது என்பதை அறிந்தேன். இங்கு சென்று தரிசித்த பின்னர் தான் இதன் அருமை பெருமைகளை அறிய முடிந்தது.

மாசி (பெப்ரவரி) மாதம் 10ம் திகதி புதுடெல்லியிலிருந்து காரில் குருக்ஷேத்திரம் சென்றோம். பனி மூட்டங்கள் சாலைகளில் இருந்தாலும் இருவழிச்சாலை என்பதால் பயமின்றிப் பிரயாணம் செய்து அதிகாலை 3 மணிக்கு குருக்ஷேத்திரம் அடைய முடிந்தது. சாலை நெடுகலும் பொதிசுமக்கும் வண்டிகள் ஏராளமாகச் சென்றன. இரவு வேளைகளில்தான் இவை இச்சாலை வழியே செல்ல முடியும். 11–02–2004 புதன் காலை 10.30 மணிக்கு இடங்கள் பார்ப்பது என்று முடிவு செய்து புறப்பட்டோம். அப்போதும் பனி மூட்டமாக இருந்தது. இடைக்கிடை ஓட்டோ ரிக்ஷாக்களும் கார்களும் சென்றன. மனிதர்கள் போர்வையால் போர்த்துக்கொண்டும் காதை மூடிக் கட்டியும் அங்குமிங்குமாய்த் திரிந்தனர். முன்னாள் இந்திய பிரதமர் இந்திரா காந்தி அடிக்கடி சென்று தரிசிக்கும் சர்வேஸ்வரர் சிவன் கோவிலை முதல் தரிசித்தோம். இதைச் சுற்றி பிரம்ம குளம் வாவிபோல் மிக அழகாகவும் தூய்மையாகவும் இருக்கிறது. மகாபாரதயுத்தத்தின் கடைசி நாளன்று துரியோதனன் இக்குளத்தில் தான் ஒளித்துக்கொண்டான். இக்குளத்தில் சூரிய கிரகண அமாவாசையன்று 5 இலட்சம் பேர் குளிக்கமுடியும். 31 ஆம்திகதி மே மாதம் 2003 அன்று நடந்த சூரியகிரகண தினத்தில் லட்சக்கணக்கான மக்கள் நாலாதிசைகளிலும் இருந்து வந்து கலந்தனர் என புள்ளி விபரம் அறிவிக்கின்றது.

குரு என்ற அரசனின் நினைவாகத் தான் பாண்ட கௌரவ யுத்தத்தின் முன்னிருந்தே இவ்விடம் குருக்ஷேத்திரம் என அழைக்கப்படுகின்றது.

அடுத்ததாகப் பத்திரகாளி கோவில் சென்றோம். இக்கோவிலை நடந்தே சென்று தரிசித்தோம். பாரததேசத்தின் சக்தி பீடங்களில் இதுவும்

ஒன்றாகும். சிவாகம புராணத்தின் பார்வதி, சிவன் தடுத்தும் தகப்பனாகிய தக்கனின் யாகத்திற்குச் சென்று அவமானமடைந்தாள். யாக குண்டத்தில் விழுந்த பார்வதியை சிவன் தாங்கிச் செல்லும் போது விஷ்ணு அம்பாள் உடலை 51 துண்டுகளாக வெட்டினார். அதில் இடது கணுக்கால் விழுந்த இடமே இதுவாகும்.

சூழ்நிலையில் பளிங்குமேடையில் கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கு உபதேசம் செய்யும் காட்சியைக் காணலாம். பூசகரோ, பிச்சைக் காரார்களோ என எமை விரட்டுவார்களே இங்கு கிடையாது. மாபிளில் செய்த திருவுருவங்களைக் கண்டதும் எமையறியாமலே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கத் தோன்றும். சூழ்நிலையை விட்டுப்போக மனமே இருக்காது. அந்த அனுபவத்தை, புனிதத்தை, மகிமையை உணர்ந்து ஒரு மணித்தியாலம்வரை தரிசித்துக் கொண்டே இருக்கலாம். பழைய ஆலமரத்தையும் சுற்றிய பின்னர் ஜோதிசரன் என்ற குளத்தைக் காணலாம். நாங்கள் சென்ற அதே தினத்தில் மாலை 3.00 மணிக்கு மொரீசியஸ் பிரதம மந்திரி இவ்விடத்தை தரிசிக்க வருவதாகக் கூறினார்கள்.


கீதோபதேசம் நிகழ்ந்த இடம்

வேத மந்திரங்கள் உச்சாடனம் செய்யப்பட்ட இடமாகிய குருக்ஷேத்திரத்தில் தான் வசிட்ட முனிவருக்கும், விசுவாமித்திரருக்கும் தெய்விக ஞானம் ஏற்பட்டது. இதன் பின்னர் பீஷ்மர் கோவிலை சுமார் 7 கி.மீ தூரம் சென்று தரிசித்தோம். இங்கு பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் காட்சியைக் காணலாம். இவ்விடத்தில்தான் அவர் உபதேசம் செய்தார், கோவில் செல்லுமுன்னரே, ஒரு கேணியை காணலாம். அது தான் அருச்சுனன் அம்பால் பூமியை எய்து பீஷ்மருக்கு தண்ணீர் எடுத்துக்கொடுத்தது என்றனர். இதன் ஆழம், எமது யாழ்ப்பாணத்து நிலாவரையைப் போன்று, காணமுடியாதது. கடைசியாக பிர்லா கீதைக்கோவில் தரிசனம். இங்குதான் கிருஷ்ண பகவான் ஆலமரத்தடியில் உபதேசம் செய்தார். சென்றவுடனேயே இதன் புனிதத் தன்மையை உணரலாம். அமைதியான, குளிர்மையான

இதன் பின்னர் தங்குமிடம் திரும்பி சாதம், பருப்பு, பலவிதமான மரக்கறிகள் கொண்ட கறிகளோடு மதியபோசனம். 4.00 மணிபோல் அருகிலிருக்கும் ஒரு விஞ்ஞான காட்சிச்சாலையைப் பார்க்கச்சென்றோம். தலைக்கு 101ரூபா அனுமதி என்றாலும் பார்க்க வியப்பூட்டுமிடம். பாரத யுத்தத்தை அப்படியே மனித, மிருக உருவங்களில் உருவாக்கி தகுந்த விளக்கங்களோடும், பின்னிசையோடு, குதிரையின் குளம்பொலி, யானையின் பிளிறல், வாட்போர் சத்தம், அலறல் சத்தம் போன்றவற்றுடன் மீள உருவாக்கியுள்ளார்கள். நேரம் சென்றதால் கிருஷ்ணரின் காட்சிச்சாலையைப் பார்க்கமுடியவில்லை. இரவு 7.00 மணிக்கு டுபைாவ யனெ ஞூமரனெ என்ற நிகழ்சச்சியை 15 ரூபா அனுமதிக்கட்டணத்துடன் கீதைக்கோவிலில் பார்த்தோம். தொலைக்காட்சியில் காட்டிய மகாபாரத நடிகர்களின் குரலில் கீதை உபதேசம்.

மகாபாரதக் காட்சிகள் ஹிந்தி மொழியில் ஒரு மணி நேரம் நடைபெற்றது. வாழ்க்கையே ஒரு பாரதப்போர். நலம், கேடு ஆகியவற்றிற்கு நடுவில் மனிதன் தத்தளிக்கின்றான். கேட்டையே நலனெனக் கருதுபவர்கள் பலர். எது நலன் எதுகேடு என்பது தெளிவாதல் வேண்டும்.

இறுதியில் நலன்தான் வெற்றி பெறும். (இலங்கையில் வடமாகாணத்தில் சாவகச்சேரியும் குருக்ஷேத்திரமானது யாவரும் அறிந்ததே.) இந்தப் புண்ணிய பூமியைத் தற்போது எல்லோரையும் அழைத்துக் காண்பிக்க நிறுவனங்கள் போட்டி போடுவது இன்றும் அதிசயம்.

குருக்ஷேத்திரம் எமது ஊரைப்போல் ஒரு அமைதியான இடமாகும். சிலருக்குத்தான் ஆங்கில அறிவு இருக்கின்றது. சாதாரண மக்களே அங்கிருக்கிறார்கள். இன்றும் இவ்விடத்தின் புனிதத்தன்மை அழிந்து விடவ-ில்லை. இவ்விடத்தைத் தரிசிக்க ஒரு நாள் தேவை. விமானத்தால் டெல்லியை அடைந்து அங்கிருந்து கார், பஸ்வண்டி மூலம் செல்லலாம். சிறப்பான சேவையுண்டு. ரயில் மார்க்கமாக செல்லுவதாயின் டெல்லியிலிருந்து குருக்ஷேத்திரம் சந்திப்பு, புகையிரத நிலையத்தை அடைய முடியும். இவ்விடத்தில் புனித நீராடும்போது சவர்க்காரம் பவித்தல் கூடாது. காரோ, ரிக்ஷாவோ, ஓட்டோவோ வாடகைக்கு அமர்த்தலாம். கோவில்கள் 12.00 மணியிலிருந்து 4.00 மணிவரை மூடப்பட்டிருக்கும். இப்புண்ணிய பூமியில் இரண்டு இரவுகள் தங்கியிருக்கும் பாக்கியம் பெற்று 12.02.2004 காலை டெல்லி திரும்பினோம்.

WHEN DISAPPONTMENT STARES ME IN THE FACE AND ALL ALONE I SEE NOT ONE RAY OF LIGHT, I GO BACK TO THE BHAGAWAD GITTA. I FIND A VERSE HERE AND A VERSE THERE AND I IMMEDIATELY BEGIN TO SMILE IN THE MIDST OF OVERWHELMING TRAGEDIES-AND MY LIFE HAS BEEN FULL OF ETERNAL TRAGEDIES-AND IF THEY HAVE LEFT NO VISIBLE NO INDELIBLE SCAR ON ME, I OWE IT ALL TO THE TEACHING OF THE BHAGWAD GITA.

**MAHATMA GHANDHI**

**கலசம் இந்தப் புலம் பெயர் நாட்டில் வாழும் சைவமக்களுக்குச் செய்து வரும் அளப்பரிய சேவைகளுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!**

டாக்டர் வீ. பழனிவேல்

**F.D.S.R.C.S(Eng)** (பல்வைத்தியர்)

**127 Green Gate Street, London E13 OBG**

**Tel: 0208 472 9429**

# சிறுவர் கலசம்

## DURGA - THE SLAYER OF MAHISHA

continued from last Issue....




DURGA LOOKED AT HIM WITH CONTEMPT.
SNORT, O FOOL! IN A MOMENT, THE DEVAS WILL ROAR IN TRIUMPH AT THIS VERY PLACE, WHEN YOU ARE SLAIN!
ENRAGED, MAHISHA RUSHED AT HER.
BUT DURGA LEAPT UPON HIM AND PINNED HIM DOWN.


MAHISHA STRUGGLED TO FREE HIMSELF. AS HALF OF HIM EMERGED FROM THE MOUTH OF THE BUFFALO, DURGA RAISED HER SWORD.


THE NEXT MOMENT, MAHISHA FELL DEAD, AT THE FOOT OF DURGA. THE DEVAS WERE OVERJOYED.
O DURGA, UPHOLDER OF VIRTUE, DESTROYER OF EVIL, WE HUMBLY SALUTE YOU! O DEVI, CONTINUE TO PROTECT US!
THE END

# True Devotion

Narada is one of the greatest devotees of the Lord. Veena in hand he roams all the three worlds, singing the Lord's name. Everyone respects him.

One day he came to Vaikuntha (one of the heavenly abodes of God), singing "Narayana, Narayana". Lord Vishnu greeted him and seated him comfortably. The Lord asked him, "Narada, you have been going around the world. Did you notice anything special?" Narada stood up and said, "Lord! I do not know what to tell you. People everywhere are getting more and more worldly. They are getting absorbed more and more in the pleasures of the senses. Nobody has time to remember you. You must do something about it. Otherwise you will be completely forgotten. Your very position as the Lord of the universe is in danger".

The Lord smiled. He can see readily what is behind the words and deeds of everyone. He understood that Narada was speaking thus because he thought no one was so great a devotee as he. The Lord loved Narada dearly. So he wanted to remove the poisonous seed of **PRIDE** from Narada's heart. He told him, "Narada, you go about singing my name non stop. Hearing you, are not people inspired? Listening to you, will they also not chant my name?" This argument only increased Narada's ego. He said, "Lord! Devotion is not easy. It is true I am spending 24 hours singing your glory.



But ordinary people cannot do like that."

The Lord was now sure that Narada must be taught a very good lesson. He said, "Narada, no doubt few can equal you in devotion. That is why I want you to go and meet the peasant Govinda in the village of Salagrama. You may be able to know some thing more about devotion from him". Narada's pride was touched. Who was this Govinda whose devotion was greater than his? He must surely meet him.

Narada came down to the earth quickly. He located the village and spotted the residence of Govinda.. This peasant was a poor man living in a hut. Narada watched his actions hiding behind a tree.

Govinda got up in the morning, washed his face and stood in front of the Lord's picture. He uttered "Narayana, Narayana, Narayana" thrice. He bowed down, then took his plough, put it on his shoulder and walked to his field. The whole day he ploughed and watered the field. At dusk he returned home. He took his bath and once more stood before the Lord's picture. He again uttered Narayana thrice. Then he took his food and slept, snoring loudly.

Narada was puzzled. How can this Govinda be a greater devote than himself ? Perhaps the Lord was pulling his leg. Straight away he returned to Vakuntha.

"Narada, did you meet Govinda?" asked the Lord with a smile "yes," replied Narada, "I found your Govinda. But you could have told me that you were joking. This Govinda utters your name only twice a day. He is completely absorbed in his field. I sing your name all the 24 hours. And you compare Govinda with me!"

The lord continued to smile. "Narada, could you do one thing? Please bring a cup



filled to the brim with oil". Narada brought an oil-filled cup. "Now go around this assembly thrice with the cup in your hand. But see that not one drop of oil is spilt". Narada did as ordered. Holding the cup very carefully, he completed three rounds. Not a drop of oil was spilt. With a proud smile he said to the lord, "I have passed your test. But tell me why you wanted me to do this"

The Lord burst in to laughter. "My son, you could not get time to utter my name even once while attending to the cup of oil for a few minutes. Look at Govinda. He is running a family with all its cares, but he manages to utter my name before he starts his work and again after finishing the work. This means by doing his worldly duties he is always thinking of me."

Narada's pride in his devotion was broken.



The Lord asked him, "Narada, while making the rounds, how many times did you utter my name?" Narada was upset. He said, "Lord, what a question to ask? You wanted me to see that not a drop of oil fell down. Attending to that how can I utter your name?"

It is not the number of times the Lord's name is uttered that matters. It is constantly remembering him under all conditions that is true devotion. Whatever you do, **REMEMBER** the Lord.

***

# HINDUISM

## What is the Hindu explanation of Creation?

**How were, the world we live in, the universe we see and observe, created? Have the Hindu scriptures attempted any explanation of this phenomenon? Can their explanations stand the scrutiny of science?**

The secret behind the creation of this world, the process of creation, the mystery surrounding the phenomena of birth and death, the problem of good and evil, the ultimate goal of human life and other questions like these, have been taxing the human intelligence from time immemorial, ever eluding any intelligible solutions. Hindu Rishis have offered their solutions to these, based on their own mystic experiences, which are also the dictates of the Vedas. The *'Shad darsanas'* or the six systems of philosophy are a direct result of their experiences and researches. In them we find several explanations regarding creation. Main ones are as follows:

